அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சி
ALL INDIA SAMATHUVA MAKHAL KATCHI



Phone : 044-2814 3306, 2814 3307, fax : 044-4212 4624, e-mail : orsk14@gmail.com

அ.எண்: 17 /2017
தேதி: 1.2.2017

## மக்களைவையில் 2017 - 2018- ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையை தாக்கல் செய்த நிதியமைச்சர் அருண் ஜேட்லியின் அறிவிப்புகளும் அதில் குறிப்பிடப்பட்டுள்ள TEC India நோக்கமும் வரவேற்கதக்கது.

## அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சியின் நிறுவனத் தலைவர் ஆர்.சரத்குமார் அறிக்கை

இந்த நிதிநிலை அறிக்கையை பிப்ரவரி மாத தொடக்கத்திலேயே தாக்கல் செய்ததால் இதில் குறிப்பிட்டுள்ள திட்டங்களை சிறப்பாக செயல்படுத்த அனைத்து துறைகளுக்கும் போதுமான கால அவகாசம் கிடைக்கும் என்ற காரணம் வரவேற்கத்தக்கதாகும்.

Tec India (Transform, Energise and Clean India) - என்ற பாதையில் நிதிநிலை அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது. அதற்குறிய செயல்பாடுகளுடன் தொடர்ந்தால் வெற்றி சாத்தியப்படும்.

விவசாயிகள் கடன் இலக்கு ரூ.10 லட்சம் கோடியாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. நீர்ப்பாசனத்துக்காக ரூ,40,000 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 2019 ஆண்டின் இறுதியில் 50,000 கிராம பஞ்சாயத்துகள் வறுமையின் பிடியிலிருந்து விடுவிக்கப்படும் என்று கூறப்பட்டுள்ளது. நுண் சொட்டு நீர் பாசனத்துக்கு தொடக்க மூலதனமாக ரூ.5000 கோடி ஒதுக்கப்படுகிறது.

விவசாயம், கிராமப்புற வளர்ச்சி மற்றும் வேளாண்துறை சம்மந்தப்பட்ட தொழில்களுக்கு கடந்த ஆண்டை விட 24% சதவீதம் அதிகம் ஒதுக்கப்பட்டுள்ளது. (ரூபாய் 187223 கோடி) உரிய செயல்வடிவம் கொடுக்கப்படாவிடில் பயனளிக்காது.

வறட்சியை சமாளிக்க திட்டமிடப்பட்டிருக்கும் 5 லட்சம் குளங்களும், அடுத்த ஆண்டு மே மாதத்திற்குள் அனைத்து கிராமங்களுக்கும் மின்வசதி செய்துதருவதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது வரவேற்கதக்கது எனினும் வெள்ளம் ஏற்படும் காலங்களை சமாளிக்க உரிய நடவடிக்கைக்கான அறிவிப்புகள் வேண்டும்.

விவசாயத்திற்கும் விவசாயிகளுக்கும் முன்னுரிமை கொடுத்து கிராமப்புற வளர்ச்சிக்கு முக்கியத்துவம் கொடுத்தால் நிச்சயமாக கிராமங்களும் நகரங்களுக்கும் உள்ள இடைவெளி குறையும். நகரங்களின் வீக்கம் சமப்படுத்தப்பட்டு பல்வேறு பகுதியில் வாழும் மக்களுக்கும் அனைத்து வசதிகளும் வழங்க ஏதுவாக இருக்கும். இந்த முயற்சிகள் அனைத்தும் முன்னேற்ற பாதையில் முழுமையாக செயல்படுத்தினால் மட்டும் இந்த நிதிநிலை அறிக்கையின் வெற்றி சாத்தியப்படும்.

தலைமை தபால் நிலையங்களில் பாஸ்போர்ட் வழங்கும் அலுவலகம் ஏற்படுத்தப்பட இருக்கும் திட்டம் வரவேற்க படவேண்டிய ஒன்று. தபால் நிலையங்களின் செயல்பாடுகள் மீண்டும் முழுமையாக செயல்பட உதவியாக இருக்கும்.

2.5 லட்சத்திலிருந்து 5 லட்சம் வரை சம்பளம் பெறுவோருக்கு வருமான வரி 10லிருந்து 5 சதவீதமாக குறைக்கப்பட்டிருக்கிறது.

2019-ல் அனைத்து ரயில் கழிவறைகளும் பயோ கழிவறைகளாக மாற்றம் செய்ய இருப்பதும், ரயில்வே பாதுகாப்பு நிதியகம் ரூ.100000 கோடியில் உருவாக்கப்பட இருப்பதும் உரிய காலத்தில் செயல்வடிவம் கொடுக்கப்படவேண்டும் .

இந்தியாவை மின்னணு துறையில் உலக வர்த்தக துறையில் முக்கிய மையமாக மாற்றுவதற்கு எடுக்கும் நடவடிக்கை, 10000 கோடியில் BharatNet broadband போன்ற அறிவிப்புகள் புது கண்டுபிடிப்புகளுக்கு வழி வகுக்கலாம்.

அரசியல் கட்சிகளுக்கு ரூபாய் 2000 த்திற்கு மேலாக நன்கொடை காசோலை மற்றும் வங்கிகள் மூலமாக மட்டும்தான் என கூறியிருப்பதும் வரவேற்கதக்கது.

அமெரிக்க அதிபரின் வெளிநாட்டு பணியாளர்கள் - குறிப்பாக இந்திய பொறியாளர்கள் கொள்கை நமது இளைஞர்களை எந்த அளவுக்கு பாதிக்கும் என்பதை நாம் பொறுத்திருந்து பார்க்க வேண்டும். படித்த இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு பெருகுவதற்கு திட்டங்களும் ஏற்கனவே அறிவிக்கப்பட்டிருந்த Start up India போன்ற திட்டங்களுக்கு இலக்குகளும் இந்த ஆண்டில் இந்த அரசு என்ன செய்ய போகிறது என்பது மேலும் தெளிவாக விளக்கப் படவேண்டும். ஆதிதிராவிடர், மலைவாழ் பழங்குடியினர் பிரிவினர்களுக்கு ஒதுக்கப்பட்ட நிதி அதிகப்படுத்த படவேண்டும்.

தேசிய நதிகளை இணைக்கும் / தேசியமயமாக்குதல் குறித்த அறிவிப்பும் மாநிலங்களுக்கிடையே நதிநீர் பங்கீடு குறித்த அறிவிப்பும் இடம்பெறாதது வருத்தமளிக்கிறது.

எனவே, விவசாயிகளுக்கு முக்கியத்துவம் கொடுக்க முனையும் அரசு விவசாயத்திற்கு அடிப்படையான நீர் நிலைகள் குறித்து தெளிவாக குறிப்பிட்டிருந்தால் இந்த நிதிநிலை அறிக்கை முழுமை அடைந்திருக்கும்.

நல்ல முயற்சி.

நன்றி, வணக்கம்
உழைப்பவரே உயர்ந்தவர்,
என்றும்அன்புடன்,



**ஆர்.சரத்குமார்**
நிறுவனத் தலைவர்